புதுச்சேரி அரசு
போக்குவரத்து துறை
*******

எண்:0186/TD/RTO(HQ)/2017 புதுச்சேரி, தேதி: 18-01-12017

**செய்திக் குறிப்பு**

சாலை பாதுகாப்பு தொடர்பாக, உச்ச நீதிமன்ற சாலை பாதுகாப்புக் குழுவின் 27.12.2016 அறிவுறுத்தலிற்கேற்ப மோட்டார் வாகனச் சட்டம் 1988-ன்படி இந்தியாவில் உள்ள அனைத்து வாகனங்களுக்கும் மூன்றாம் நபர் காப்பீடு கட்டாயம் என்று பொது மக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. தற்பொழுது சாலையில் பயணிக்கும் வாகனங்களில் சுமார் 50 சதவீதம் காப்பீடு இல்லாமல் பயணிக்கின்றன, என்று காப்பீட்டு ஒழுங்கு முறை மேம்பாட்டு ஆனையம் (IRDA) மற்றும் பொது காப்புறுதி குழுமம் ஆகியன தெரிவித்துள்ளன. காப்பீடு இல்லாத வாகனங்களால், ஏற்படும் விபத்தில் பாதிக்கப்படுபவர்கள் இழப்பீட்டு தொகை பெறுவதற்கு சிரமம் ஏற்படுகிறது.

தற்பொழுது, சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம், அனைத்து மோட்டார் வாகன விபரங்கள் அடங்கியுள்ள "வாகன்" மென் பொருள் விபரங்களோடு, IRDA-யின் மோட்டார் வாகன காப்பீடு நிறுவன விபரங்கள் சரிபார்க்கப்பட்டு, மூன்றாம் நபர் காப்பீடு இல்லாத வாகனங்களை கண்டறிய நடவடிக்கை எடுத்துள்ளது; இந்த நடவடிக்கை 2017 ஜனவரி 31-க்குள் நிறைவு செய்யப்படும். இதன் விவரங்கள் மாநில போக்குவரத்து அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு மூன்றாம் நபர் காப்பீடு இல்லாத வாகனங்களின் உரிமையாளர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

அனைத்து வாகனங்களுக்கும் மூன்றாம் நபர் காப்பீடு அவசியம் என்பதால், மோட்டார் வாகன உரிமையாளர்கள் அனைவரும் தங்களிடம் உள்ள வாகனங்களுக்கு மூன்றாம் நபர் காப்பீடு செய்யம்படி கேட்டுகொள்ளப்படுகிறார்கள். வாகன தணிக்கையின் போது மூன்றாம் நபர் காப்பீடு செய்யதவர்களின் வாகனங்களை போக்குவரத்து அதிகாரிகளால் முடக்கம் செய்யப்படும்; மூன்றாம் நபர் காப்பீடு செய்த பிறகே முடக்கிய வாகனங்கள் போக்குவரத்திற்கு அனுமதிக்கபடும்; இது உடனடியாக செயல்படுத்தப்படுகிறது.

அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் மூன்றாம் நபர் காப்பீடு செய்யவேண்டிய தேவை குறித்து புதுச்சேரி போக்குவரத்துத் துறை கடந்த 12.11.2012 அன்று பொது மக்களுக்கான விழிப்புணர்வு செய்திக்குறிப்பு வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. வாகனத் தணிக்கை தொடர்ந்து நடைபெற உள்ளதால், மோட்டார் வாகன உரிமையாளர்கள் அனைவரும் தமது வாகனங்களுக்கு மூன்றாம் நபர் காப்பீடு செய்து போக்குவரத்துத் துறையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

GOVERNMENT OF PUDUCHERRY TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்

GOVERNMENT OF PUDUCHERRY
TRANSPORT DEPARTMENT
***

No.0186/TD/RTO(HQ)/2017 dt:18-01-2017

**PRESS RELEASE**

As per direction of the Supreme Court Committee on Road Safety dt. 27-12-2016 and as per Section 146 of the Motor Vehicles Act, 1988, the third party insurance coverage for all vehicles in India is mandatory. It is informed that, at present nearly, 50% of the vehicles plying on road are without insurance by the Insurance Regulatory Development Authority (IRDA) and General Insurance Council (GIC). The non-insurance of vehicles causes much hardship to the Road accident victims in obtaining compensation.

Now, the Ministry of Road Transport & Highways (MoRTH) has taken steps to map the VAHAN data with the Insurance data to identify the vehicles without third party insurance. The said process will be completed within 31st January 2017 and the details of uninsured vehicles will be sent to the Transport Authority in the State and actions will be initiated against the defaulters.

Third party insurance scheme is mandatory as per the Act for the Motor Vehicles all the owners of the Motor Vehicles are hereby requested to insure their vehicles under the third party insurance coverage. The vehicles plying without third party insurance will be detained by the Authority during enforcement and only after production of necessary valid Insurance Certificate by the owners to the concerned Authority the detained vehicle will be released. This comes into force immediately.

In this connection, the Transport Department, Puducherry has already issued a press release on 12-11-2012 to create an awareness regarding the third party insurance coverage to all the General Public. The enforcement team will also monitor the same. Hence, all the owners of the motor vehicles are hereby requested to extend their kind co-operation to ensure coverage of third party insurance to their motor vehicles.

GOVERNMENT OF PUDUCHERRY ★ TRANSPORT DEPARTMENT

(S.D. SUNDARESAN)
TRANSPORT COMMISSIONER